සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## புவியியல் - භූගෝල විද්‍යාව

தரம் : **8** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
- **இல 1 முதல் 5 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுத்து இடைவெளி நிரப்புக.**

1. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள வளையங்களைக் கொண்ட கோள் ............................. ஆகும்.
   (புவி/சனி/செவ்வாய்)

2. சூரியனின் ஒரு சுழற்சிக்கு ................................ புவி நாட்கள் எடுக்கும்.
   (25.4/365/28)

3. தொலைநோக்கிக் கருவியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ......................... ஆவார்.
   (குளோடியஸ் தொலமி/நிக்கலஸ் கொப்பநிக்கஸ்/கலிலியோ கலிலி)

4. 180$^{o}$ நெடுங்கோடு, நாடுகளை ஊடறுத்து செல்லாத வகையில் குறிக்கப்பட்டுள்ளது .......................... ஆகும்.
   (கிறீன்வீச் கோடு/சர்வதேச தேதிக் கோடு/மத்திய கோடு)

5. தென்னாசிய வலய நாடுகளிடையே .............................. ஆனது கடற்கரையை கொண்டில்லை.
   (நேபாளம்/பங்களாதேஷ்/இலங்கை)

- **இல 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் இடுக.**

6. சூரியன் புவியை விட 109 மடங்கு பெரியது. (    )

7. அகக் கோள்கள் சிலிக்கேற் மற்றும் உலோகப் பொருட்களினால் உருவாக்கப்பட்ட பாறைகளை உள்ளடக்கியுள்ளது. (    )

8. கி.பி 1957 ஐக்கிய அமெரிக்கா முதன் முறையாக விண்வெளி ஆய்வுகளுக்காக செயற்கை கோள் ஒன்றினை அனுப்பியது. (    )

9. புவி சூரியனைச் சுற்றிவருவதால் இரவு பகல் உண்டாகிறது. (    )

10. கங்கை நதி இந்துக்களின் புனித நதியாக கருதப்படுகின்றது. (    )

kalvi.lk

- **இல 11 முதல் 15 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

11. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களில் அதிக மேற்பரப்பு வெப்பநிலையைக் கொண்ட கோள் ................................ ஆகும்.

12. புவியின் ............................. காலமானது 23 மணித்தியாலங்களும் 56 நிமிடங்களும் ஆகும்.

13. வளிமண்டல வாயுக்களில் 78.09% காணப்படுவது ................................. வாயுவாகும்.

14. புவியானது ................................. மில்லியன் சதுர கிலோ மீற்றர் அளவு கொண்ட கோள் வடிவான ஒரு பொருளாகும்.

15. $0^o$ நெடுங்கோடானது இங்கிலாந்தின் .................................. நகரை ஊடறுத்துச் செல்லும்.

- **இல 16 முதல் 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

16. சூரியனின் மேற்பரப்பில் சூரியப் புயல்கள் ஏற்படும் போது எது உருவாகும்?
    1) வெப்பம் 2) காற்று 3) சுவாலைகள் 4) வாயுக்கள்

17. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களில் மிக உயர்ந்த ஈர்ப்புச் சக்தியை கொண்ட கோள் எது?
    1) செவ்வாய் 2) வெள்ளி 3) சனி 4) வியாழன்

18. நெடுங்கோடுகளை அடிப்படையாகக் கொண்டு புவியானது எத்தனை பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
    1) 04 2) 15 3) 24 4) 360

19. சார்க் அமைப்பிலுள்ள ஆப்கானிஸ்தான் புவியியல் ரீதியாக அமைந்துள்ள வலயம் யாது?
    1) தென் ஆசியா 2) கிழக்கு ஆசியா
    3) வட ஆசியா 4) மத்திய ஆசியா

20. தென்னாசிய வலய நாடுகளில் சனத் தொகை கூடிய நாடு எது?
    1) இந்தியா 2) பாகிஸ்தான்
    3) பங்களாதேஷ் 4) சீனா


(2x20=40 புள்ளி)

kalvi.lk

**பகுதி** II


♦ முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. (அ) கீழே தரப்பட்டுள்ள A -E வரையான கோள்கள் மற்றும் நபர்களை பெயரிடுக. (5 புள்ளி)




A B C D E

(ஆ) கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் பூகோளத்தில் A-F வரையான பிரதான அகலக்கோடுகளின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக. (6 புள்ளி)




(கடகக் கோடு, வடமுனை, மத்திய கோடு, அந்தாட்டிக் வட்டம், ஆட்டிக் வட்டம், மகரக் கோடு)

(இ) கீழே தரப்பட்டுள்ள புவி சுற்றுகையும் பருவ காலங்களும் தொடர்பான படத்தில் A-E வரையான இடைவெளிகளை நிரப்புக. (5 புள்ளி)



2. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள பல்வேறு விண்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.
   1) கோள்கள் என்றால் என்ன? (2 புள்ளி)
   2) (a) எரிகல் வலயம் எக்கோள்களுக்கிடையே உள்ளது? (1 புள்ளி)
      (b) நட்சத்திரம் மற்றும் கோள்களுக்கு இடையிலான வேறுபாடுகள் இரண்டு வீதம் அட்டவணையில் எழுதுக. (4 புள்ளி)

| நட்சத்திரம் | கோள் |
|---|---|
| 1 ........................... | 3 .................................. |
| 2 ........................... | 4 .................................. |

   3) (a) விஞ்ஞானிகளினால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிறு கோள்கள் இரண்டின் பெயர் தருக. (2 புள்ளி)
      (b) அக்கோள்களின் இயல்புகள் இரண்டு தருக. (2 புள்ளி)


3. நெடுங்கோடுகளை அடிப்படையாகக் கொண்டு உலகின் பல பிரதேசங்களில் நேரம் கணிக்கப்படுகின்றது.
   1) கிறீன்வீச் நேரம் நண்பகல் 12.00 மணி எனக் கொண்டு கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| நகரம் | அமைந்துள்ள நெட்டாங்கு | சுற்றுகைக்கு எடுக்கும் காலம் | அந்நகரத்தின் நேரம் |
|---|---|---|---|
| டாக்கா | கி.நெ 90° | பி.ப 6.00 | A ................. |
| புவனேஸ் அயேஸ் | மே.நெ 60° | B ............. | 4 மணித்தியாலம் |
| கொழும்பு | C ................ | பி.ப 5.20 | 5மணி 20 நிமிடம் |

(6 புள்ளி)

   2) புவிச்சுற்றுகையால் ஏற்படும் நிகழ்வுகள் 2 தருக. (2 புள்ளி)
   3) தனியான நேர வலயத்தினை கொண்டிருக்கும் நாடுகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

4. ஒரு வருட காலத்தில் சூரியன் உச்சங் கொடுத்தல் அகலக் கோடுகளுக்கு ஏற்ப வேறுபடுவதனால் ஒன்றுக் கொன்று மாறுபட்ட காலநிலை அம்சங்களைக் கொண்ட பருவகாலங்கள் உருவாகின்றன.
   1) கீழே தரப்பட்டுள்ள படங்களுக்கான பருவ காலங்களை இனம் கண்டு எழுதுக. (4 புள்ளி)





   2) வட அரைக்கோளம் மற்றும் தென் அரைக் கோளங்களில் பருவ காலங்கள் ஏற்படும் மாதங்களைக் கொண்டு கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| பருவகாலம் / அரைக்கோளம் | கேடை காலம் | இலையுதிர் காலம் | குளிர் காலம் | இலைதுளிர் காலம் |
|---|---|---|---|---|
| வட அரைக் கோளம் | A - ........... | செப்டெம்பர் | B - ........... | மார்ச் |
| தென் அரைக் கோளம் | டிசம்பர் | C - ........... | ஜுன் | D - .......... |

   3) நீங்கள் மேலே குறிப்பிட்ட பருவ காலம் ஒன்றினது விஷேட இயல்புகள் 3 எழுதுக. (3 புள்ளி)

kalvi.lk

5. 1) கீழுள்ள படத்தில் காட்டப்படுவது தென்னாசியாவாகும்.




(a) A இனால் காட்டப்படும் மலைத்தொடர் மற்றும் B இனால் காட்டப்படும் பாலைவனத்தைப் பெயரிடுக.(2 புள்ளி)


(b) C,D என்பவற்றினால் காட்டப்படும் நதிகளைப் பெயரிடுக. (2 புள்ளி)

2) கீழே நிரல் (அ) இல் தென்னாசிய நாடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றினது தலை நகரங்களுக்குப் பொருத்தமான விடைகளை நிரல் (ஆ) இல் இருந்து தெரிவு செய்து அதன் ஆங்கில எழுத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.


| (அ) | | (ஆ) |
|---|---|---|
| 1- பங்களாதேஷ் | (.....) | A - புதுடில்லி |
| 2- பூட்டான் | (.....) | B - கத்மண்டு |
| 3- மாலைத்தீவு | (.....) | C - டாக்கா |
| 4- இந்தியா | (.....) | E - மாலே |

(4 புள்ளி)


3) கீழே தரப்பட்டுள்ள தேசிய கொடிகளுக்குரிய நாடுகளை இனங் கண்டு புள்ளிக் கோட்டில் எழுதுக. (3 புள்ளி)



A ...............................



B ...............................



C ...............................

6. 1) புவி வளிமண்டலத்தில் அதிகமாகக் காணப்படும் வாயுக்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

2) (a) புவி வளிமண்டலத்தின் முக்கியத்துவம் 2 தருக. (2 புள்ளி)


(b) வளிமண்டல மாசடைவிற்கு காரணமான மனித செயற்பாடுகள் 2 தருக.(2 புள்ளி)

3) (a) புவியில் நீர் பரம்பியுள்ள முறைகள் 2 தருக. (2 புள்ளி)

(b) நீரின் முக்கியத்துவம் 2 தருக. (2 புள்ளி)

Education கல்வி அமையம்

7. கீழே தரப்பட்டுள்ள குறுக்கெழுத்து சட்டகத்தைப் பூரணப்படுத்துக. (11 புள்ளி)




**இடம்இருந்து வலம்**

2) பிரதான சக்தி மூலம்
5) கோள்களின் பிரதான வகைகளுள் ஒன்று
6) $0^{o}$ நெடுங்கோடு
7) பாகிஸ்தானின் உயர்ந்த மலைத்தொடர் ஒன்று
9) தென்னாசிய நாடுகளின் அரசியல் அமைப்பு
10) வளிமண்டலத்தில் 20.95% காணப்படும் வாயு

**மேலிருந்து கீழ்**

1) 14 உபகோள்களைக் கொண்ட கோள்
3) இரவு வானத்தில் மிகத் தெளிவாக புலப்படக் கூடிய கோள்
4) தென்னாசிய வலய நாடொன்று
5) புவி தனது சொந்த அச்சினை சுற்றும் செயற்பாடு
8) புவி நீரின் 0.5% இவ்வாறு காணப்படுகிறது.

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457